**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS No.135/2016**

10.06.2025

**பி.வா.சா.2 பிரகாஷ் த/பெ. செல்வநாதன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி .**

என் தாயார் பெயர் எப்போது கிரயம் வாங்கப்பட்டது என்றால் 1998 ல் வாங்கப்பட்டது. சர்வே எண் 391/1 , 391/2 , 392 ஆகிய 6723 சதுர அடி மனையை கிரயம் வாங்கினார். சர்வே எண் 393 ல் கிரயம் ஏதேனும் பெற்றோமா என்றால் இல்லை. மாளங்கோ நாராயணசாமியிடமிருந்து கிரயம் வாங்கினார். 1998 ல் கிரயம் பெறம்போது அவ்வாறு கிரயம் பெற்ற சொத்துகளை எவ்வளவு சதுர அடி உள்ளது என்று அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. நான் கிரயம் பெறும்போது வீடு மட்டும் தான் இருந்தது என்றால் வீடு காம்பௌண் எல்லாம் சேர்ந்துதான் இருந்தது. என்னுடைய பத்திரத்தில் காம்பௌண் சுவர் எல்லைப்பகுதியாக குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. நாராயணசாமி கிரயம் பெறும்போது அதில் வீடு இல்லை காலிமனை என்று தான் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஓட்டுவீடு இருந்ததாக சொன்னார்கள். நான் 1981 ல் பிறந்தேன். நாங்கள் கிரயம் பெறும்போது எந்தபக்கம் காம்பௌண் சுவர் இருந்தது எந்தபக்கம் காம்பௌண் சுவர் இல்லை என்றால் வடக்கு பக்கம் காம்பௌண் சுவர் இல்லை தென்புறம் ஒரு வீடு இருந்தது கீழ்புறம் ஒரு காம்பௌண்சுவர் இருந்தது. நான் கிரயம் பெற்றபின்பு காம்பௌண் சுவர் கட்டினோமா என்றால் வீட்டிற்கு தெற்குபுறம் காம்பௌண் சுவர் கட்டினோம். வீட்டிற்கு தெற்குபுறம் மாளங்கோ தம்பி ரவி இருந்தார் தற்போது யார் இருக்கிறார் என்று தெரியாது. ரவிக்கு பின்பு அவரது உறவினர்கள் கிரயம் பெற்று வீட்டை கட்டி காம்பௌண் சுவர் கட்டியுள்ளார்கள். அது 5 ஆண்டுகள் ஆகிறது. நான் கிரயம் பெற்றபின்பு வீட்டிற்கு வடபுறம் வாதி வீட்டிற்கு தென்புறம் வரை பின்னால் வாய்கால் வரை கம்பிவேலிதான் இருந்தது என்றால் சரியல்ல. தற்போது கம்பிவேலி உள்ளதா என்றால் ரோட்டிலிருந்து 10 மீ வரை மேற்கு பகுதியில் காம்பௌண் சுவர் இருந்தது அதன்பின்பு வாய்கால் வரை கம்பிவேலி உள்ளது. என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள காம்பௌண் சுவர் எந்த பக்கம் உள்ளது என்றால் வீட்டிற்கு வடபுறம் உள்ளது. அந்த காம்பௌண் சுவர் ரெடிமேட் காம்பௌண் சுவர் என்றால் சரிதான். ரெடிமேட் காம்பௌண் சுவர் நடைமுறைக்கு வந்ததே 2005 ம் ஆண்டுதான் என்றால் அதுபற்றி தெரியாது. வாதி சொல்வது போல் ரோட்டிலிருந்து வாய்கால் வரை கம்பிவேலிதான் இருந்தது என்றும் புதிதாக காம்பௌண் சுவர் வைப்பதற்காக மேற்கிலிருந்து 30 அடிதூரம் வரை கம்பிவேலியை மடக்கிவைத்து ரெடிமேட் சுவர் வைத்துள்ளேன் என்றால் தவறாகும். காம்பௌண் புதிதாக கட்டும்போது தான் வாதியின் இடத்தை ஆக்கிரமித்துள்ளோம்

என்றால் சரியல்ல. மாளங்கோவிடமிருந்து வாங்கும்போது சுவர் கிடையாது என்றும் நாங்கள் கிரயம் வாங்கியபின்பு தான் சுவர் கட்டினோம் என்றால் சரியல்ல. மாளங்கோவிடமிருந்து கிரயம் பெறும்போது அங்கு சுவர் இருந்து என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. ஆக்கிரமிப்பு பகுதி வாதியின் சொத்து என்று நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் இல்லை. ஆணையர் அறிக்கை தவறு என்று நான் எந்தவிதமான மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் 25 ஆண்டுகளுக்கு மேலாக சொத்தை அனுபவித்து வருவதை எந்த ஆவணத்தின் அடிப்படையில் உறுதியாக தெரிவிக்கிறேன் என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை அந்த சொத்தை நான் வாங்கியுள்ளேன். ஆக்கிரமிப்பு செய்த காரணத்தினால் தான்அந்த இடத்தை ஒப்படைக்கவேண்டியும் உறுத்துகட்டளை பரிகாரம் கேட்டு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,
மன்னார்குடி.